www.Kanchikalvi.com



# +2 வகுப்பு – பொருளியல்



## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான குறைந்தபட்ச வினா – விடை சுருக்கம்.

அ.முனியப்பன்,
M.,A.,M.A.,M.A.,M.A.,B.Ed.,M.Phil.,
முதுகலை ஆசிரியர், பொருளியல்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
பாளையம்புதூர்- 636807.
தருமபுரி மாவட்டம்.
CELL: 9787247640

MUNIAPPAN,GHSS,...UR



www.TnpscExamOnlineResult.blogspot.in

# மேல் நிலை இரண்டாம் ஆண்டு – பொருளியல்

## I. சரியான விடைகள்

1. செல்வ இலக்கணத்தின் ஆசிரியர்
அ. ஆல்பிரடு மார்ஷல் ஆ. இலயனல் ராபின்ஸ் **இ. ஆடம் ஸ்மித்** ஈ. சாமுவேல்சன்

2. கிடைப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர்
அ. ஆடம் ஸ்மித் **ஆ. இலயனல் ராபின்ஸ்** இ. ஆல்பிரடு மார்ஷல் ஈ. சாமுவேல்சன்

3. நிகர பொருளாதார நலம் பற்றிய கருத்தை எடுத்துரைத்தவர்
**அ. சாமுவேல்சன்** ஆ. ஆல்பிரடு மார்ஷல் இ. இலயனல் ராபின்ஸ் ஈ. ஆடம் ஸ்மித்

4. பொருளாதாரம் என்பது ?
அ. இயல்புரை அறிவியல் ஆ. நெறியுரை அறிவியல் **இ. இரண்டுமே** ஈ.எதுவுமில்லை

5. முதலாளித்துவத்தை இயக்கும் அடிப்படைச் சக்தியாக விளங்குவது
அ. திட்டமிடல் ஆ. தொழில்நுட்பம் இ. அரசு **ஈ. இலாபம்**

6. சமதர்மப் பொருளாதாரத்தில் உற்பத்தி பகிர்வு மற்றும் தீர்வுகளை முடிவு செய்வது
அ. சந்தை **ஆ. மத்திய திட்டக்குழு** இ. பழக்கவழக்கமும், மரபும் ஈ. தனியார்துறை

7. சமநோக்கு வளைக்கோட்டின் அணுகுமுறையை அறிமுகப்படுத்தியவர்
அ. மார்ஷல் ஆ. இலயனல் ராபின்ஸ்
**இ. J.R. ஹிக்ஸ் மற்றும் R.G.D. ஆலன்** ஈ. ஆடம் ஸ்மித்

8. பயன்பாடு என்பது
அ. சமூக கருத்து **ஆ. உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் கருத்து**
இ. அரசின் கருத்து ஈ. அறிவியல் கருத்து

9. நுகர்வோர் எச்சம் என்பது **அ. தகுவிலை – உண்மைவிலை**
ஆ. MVn = TVn – TVn -1 இ. தேவை மற்றும் அளிப்பு ஈ. இல்லை

10. பண்டத்திற்கான தேவை இதனைச் சார்ந்தது
அ. பண்டத்தின் விலை ஆ. சார்ந்த பண்டங்களின் விலை
இ. வருமானம் **ஈ. மேற்கூறிய அனைத்தும்**

11. தேவை விதி உணர்த்துவது
**அ. விலை பண்டங்களுக்கு உள்ள தலைகீழ் உறவு**
ஆ. விலை பண்டங்களுக்கு உள்ள நேரடி உறவு இ. இரண்டும் ஈ. எதுவுமில்லை

12. தேவையின் அதிகரிப்பை இதன்முலம் காணலாம்
அ. தேவை வளைக்கோடு இடம் பெயர்வது **ஆ. ஒரே தேவை வளைக்கோட்டில் நகர்ந்து செல்லுதல்** இ. தேவை வளைக்கோட்டின் உச்சப்புள்ளி ஈ. தேவை வளைக்கோட்டின் கீழ்புள்ளி



MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR

www.Kanchikalvi.com


13. விலையில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப தேவையின் மாற்றத்தை தோற்றுவிக்கும் அளவு
அ. வருமான தேவை நெகிழ்ச்சி ஆ. குறுக்கு தேவை நெகிழ்ச்சி
**இ. விலைத்தேவை நெகிழ்ச்சி** ஈ. மேற்கூறிய அனைத்தும்

14. அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள் அ. உற்பத்தி தொழில்நுட்பம்
ஆ. உற்பத்தி காரணிகளின் விலைகள் இ. வரிகளும் சலுகைகளும்
**ஈ. மேற்கூறிய அனைத்தும்**

15. சமநிலை புள்ளியில்
அ. ஒரே விலை நிலவும் / விலை நிலையானது ஆ. தேவையும் அளிப்பும் சமம்
இ. அப்புள்ளியில் தேவைக்கோடு அளிப்புக்கோட்டை வெட்டும் **ஈ மேற்கூறிய அனைத்தும்**

16. சமநிலை விலையில் காலத்தின் பங்கை அறிமுகப்படுத்தியவர்
அ. J.R. ஹிக்ஸ் ஆ. J.M. கீன்ஸ் **இ. ஆல்பிரட் மார்ஷல்** ஈ. J.S. மில்

17. நீண்ட காலத்தில்
**அ. எல்லா காரணிகளும் மாறும்** ஆ. மாறும் காரணி மட்டும் மாறும்
இ. மாறும் மற்றும் மாறா காரணிகள் நிலையாக இருக்கும்
ஈ. மாறா காரணி மட்டும் மாறும்

18. உற்பத்தி என்பது
அ. பயன்பாட்டின் அழிவு **ஆ. பயன்பாட்டை உருவாக்குதல்** இ. மாற்று மதிப்பு ஈ. ஏதுமில்லை

19. நிலத்தின் ஆரம்ப அளிப்பு விலை **அ. பூஜ்யம்**
ஆ. உன்றுக்கும் அதிகமானது இ. உன்றுக்கும் குறைவானது ஈ. ஒன்றுக்கும் சமமானது

20. முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம்
**அ. வட்டி** ஆ. இலாபம் இ. கூலி ஈ. வாடகை

21. ...........ஏற்கும் ஒருவரே வெற்றிகரமான தொழில் முனைவோர் ஆவார்
அ. புத்தாக்கம் புனைதல் **ஆ. இடர்பாடுகளை**
இ. உற்பத்தி அலகின் இடத்தைத் தேர்ந்தெடுத்தல் ஈ. ஏதுமில்லை

22. பணச் செலவின் உள்ளடக்கமானது வெளியேறுச் செலவு மற்றும்
**அ. உள்ளார்ந்த செலவு** ஆ. சமூகச் செலவு இ. மாறாச் செலவு ஈ. பணச் செலவு

23. சமூகச் செலவு என்பது
அ. நிறுவனங்கள் ஏற்றுக்கொள்வதில்லை ஆ. சமுதாயம் ஏற்கும் செலவு
இ. உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பது **ஈ. மேற்காணும் அனைத்தும்**

24. சராசரி மாறாச் செலவு இதனால் வகுக்கும் போது கிடைக்கும்
அ. TC / Q **ஆ. TFC / Q** இ. TVC / Q ஈ. ஏதுவும் இல்லை

MUNIAPPAN GHSS PALAYAMPUDUR



www.TnpscExamOnlineResult.blogspot.in

www.Kanchikalvi.com



25. நிறைவுப் போட்டி அங்காடியில் காணப்படும் நிலை
அ. ஒரே விற்பனையாளர் ஆ. இரண்டு விற்பனையாளர்
**இ. எண்ணிக்கையில்லா விற்பனையாளர்** ஈ. சில விற்பனையாளர்

26. சமநிலை விலைக்கும் மேல்
அ. S < D **ஆ. S > D** இ. S = D ஈ. ஏதுவுமில்லை

27. எந்நிலையில் ஒரு நிறுவனம் சமநிலை பெறும்
**அ. MC = MR** ஆ. MC = AC இ. MR = AR ஈ. MR = AC

28. நிறுவனம் மற்றும் தொழிற்சாலை ஒன்றாக அமைவது
அ. நிறைவுப்போட்டி ஆ. இரு விற்பனையாளர் இ. சில்லோர் **ஈ. முற்றுரிமை**

29. விற்பனைச் செலவின் மிக முக்கியமான வடிவம் எது **அ. விளம்பரங்கள்**
ஆ. ஒரே மாதிரியான பண்டங்கள் இ. விற்பனை ஈ. எதுவும் இல்லை

30. வாரம் என்பது இதனுள் ஒன்றை பயன்படுத்தியதற்காக கொடுக்கப்படும் விலை
அ. மூலதனம் ஆ. அமைப்பு இ. உழைப்பு **ஈ. நிலம்**

31. இலாபம் இதற்கான வெகுமதி
அ. நிலம் ஆ. மூலதனம் இ. உழைப்பு **ஈ. அமைப்பு**

32. போலி வாரம் என்ற கருத்தின் ஆசிரியர்
அ. ஆடம் ஸ்மித் **ஆ. மார்ஷல்** இ. ரிக்கார்டோ ஈ. சாமுவேல்சன்

33. நீர்மை விருப்பகோட்பாட்டின் ஆசிரியர்
**அ. J.M. கீன்ஸ்** ஆ. மார்ஷல் இ. சாமுவேல்சன் ஈ. நைட்

34. பேரியல் பொருளியல் சிந்தனையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர்
அ. டேவிட் ரிக்கார்டோ **ஆ. J.M. கீன்ஸ்** இ. ஆடம் ஸ்மித் ஈ. மால்தாஸ்

35. பேரியல் பொருளாதாரத்தில் மையப் பிரச்சனை
**அ. வருமானமும் வேலை வாய்ப்பும்** ஆ. விலையும் வெளியீடும்
இ. வட்டியும் பணமும் ஈ. எதுவுமில்லை

36. இறுதி நிலை நுகர்வு நாட்டம்
அ. $\frac{\Delta S}{\Delta Y}$ ஆ. $\frac{C}{Y}$ இ. $\frac{\Delta P}{\Delta Q}$ **ஈ. $\frac{\Delta C}{\Delta Y}$**

37. பணக் கொள்கையை அமல்படுத்துவது
**அ. மைய வங்கி** ஆ. மாநில அரசு இ. மத்திய அரசு ஈ. தனியார் துறை



www.TnpscExamOnlineResult.blogspot.in

www.Kanchikalvi.com


38. பொதுமக்களிடம் உள்ள புழக்கப்பணம் என்பது
அ. **M1** ஆ. M2 இ. M3 ஈ. M4

39. வங்கி வீதம் எப்போது உயர்த்தப்படுகிறது
அ. பணவாட்டம் ஆ. விலை நிலையாக இருத்தல் இ. வேலையின்மை **ஈ. பணவீக்கம்**

40. பணவீக்கத்தின் போது என்ன நிகழும்
**அ. வியபாரிகள் இலாபம் ஈட்டுவர்** ஆ. ஊதியம் ஈட்டுபவர் இலாபம் பெறுவர்
இ.மாத சம்பளம் பெறுபவர் இலாபம் பெறுவர் ஈ. வாடகைக்கு விடுபவர் இலாபம் பெறுவர்

41. வரி வருவாய்
அ. கட்டணம் **ஆ. வரிகளின் வகைகள்** இ. பொதுத் துறை
ஈ. வரியற்ற வருவாய்

42. கூட்டாட்சி குடியரசு இதனைக் கொண்டது
**அ. மைய மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்** ஆ. மைய மற்றும் மாநில அரசுகள்
இ. மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஈ. மேற்கூறிய அனைத்தும்

43. அரசினால் விதிக்கப்படும் கட்டாய கட்டணம் என்பது
அ. அனுமதி ஆ. வெகுமதியும் மற்றும் வாணிபம் இ. கடன் **ஈ. வரி**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. நுண்ணியல் என்பது ...............ஆகும் **( சிறிய )**
2. பண்டங்களுக்கு, பண்டங்களை மாற்றிக் கொள்வது.............ஆகும் **(பண்டமாற்று முறை)**
3. பொருளாதாரம் என்பது ............அறிவியலாகும் **(சமூக)**
4. பலதரப்பட்ட செல்வத்திற்கு எடுத்துக்காட்டு ............. **(சமுத்திரம் / கடல்)**
5. முதலாளித்துவத்தில் அனைத்து வகை பொருளாதார நடவடிக்கைகளும்.........மையமாகக் கொண்டே செயல்படுகிறது **(விலைக் கருவி)**
6. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு............எனவும் அழைக்கப்படுகிறது **(உற்பத்தி வாய்ப்பு எல்லை)**
7. .............என்பது பண்டங்களை, பணிகளை பயன்படுத்துவதாகும். **(நுகர்வு)**
8. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாகும் போது, மொத்த பயன்பாடு...............ஆகும் **(உச்சம்)**
9. சமநோக்கு வளைக்கோடு மையத்தை நோக்கி..............காணப்படும் **(குவிந்து)**
10. தேவைக்கோடு கீழ்நோக்கி வருவதற்கு காரணம்............... **(குறைந்துசெல் இறுதிநிலை யன்னாட்டு விதி)**
11. தனிநபர் நுகர்வு அட்டவணைகளை ஒன்று சேர்க்கும்போது...............ஆகும் **(அங்காடித் தேவை அட்டவணை)**
12. சமுதாய அந்தஸ்த்துக்காக தேவைப்படும் பண்டங்கள்..............விளைவாகும் **(வெப்ளன் விளைவு)**
13. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர்........... **(ஆல்பிரட் மார்ஷல்)**
14. விலை மாற்றத்தால் ஏற்படும், அளிப்பு மாற்ற வீதம்.............. எனப்படும் **(அளிப்பின் நெகிழ்ச்சி)**


www.TnpscExamOnlineResult.blogspot.in
MUNIAPPAN GHSS PALAYAMPUDUR

15. ..............அளிப்பைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். **(விலை)**
16. ..............விலையில், எந்த சக்தியும் விலையையோ அளவையோ மாற்ற முடியாது. **(சமநிலை)**
17. அங்காடிக் காலத்தில் அளிப்புக்கோடு ............ **(செங்குத்தாக Y – அச்சுக்குஇணையாக)**
18. நிலமும், உழைப்பும் ............ உற்பத்திக் காரணிகள் ஆகும். **(அடிப்படை)**
19. ஓர் அங்காடியின் விரிவு..............முறையின் அளவை தீர்மானிக்கிறது. **(வேலைப்பகுப்பு)**
20. ..............என்பது வேறு பல பண்டங்களை உற்பத்தி செய்திட மனித முயற்சிகளால் உருவாக்கப்பட்டது **(மூலதனம்)**
21. ............என்பது ஒரு நிறுவத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பாகும். **(உற்பத்தி சார்பு)**
22. பணச்செலவினை............என்றும் அழைக்கலாம். **(பெயரளவுச் செலவு)**
23. பொருளாதார இலாபம் என்பது மொத்த வருவாய்க்கும்...............உள்ள வேறுபாடாகும். **(பொருளாதார செலவு)**
24. மாறக் காரணி மற்றும் மாறும் காரணிகளை...............ல் மட்டுமே வேறுபடுத்த இயலும். **(குறுகிய காலத்தில்)**
25. இறுதிநிலை செலவு வளைக்கோடானது............வடிவத்தில் இருக்கும். **(Uவடிவத்தில்)**
26. நிறுவத்தின் சராசரி வருவாய், சராசரி செலவைவிட அதிகமாக இருப்பின் அந்நிறுவனம்............ஈட்டும். **(அதிகபட்ச இயல்பு இலாபம்)**
27. நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம் ............ **(விலை ஏற்பவர்)**
28. முற்றுரிமை சக்தியின் மூலம் பொருளை வடிவமைக்கும் உரிமை............. என்றழைக்கப்படும். **(சட்ட ரீதியான முற்றுரிமை)**
29. இறுதிநிலை உற்பத்தி திறன் கோட்பாடு .......... போட்டி சந்தையின் எடுக்கோளை அடிப்படையாகக் கொண்டது. **(நிறைவு)**
30. மாற்று ஊதியம் என்பது............ செலவை குறிப்பது **(வாய்ப்பு)**
31. பணக்கூலி என்பது ............ கூலி என்றும் அழைக்கலாம். **(பெயரளவு)**
32. அமைப்பை ஏற்படுத்துபவர் ............... **(தொழில் முயல்வோன்)**
33. நுகர்வு சார்பு என்பது ............... மற்றும் ............. ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள தொடாடபை விளக்குகிறது. **(வருமானம் மற்றும் நுகர்வு)**
34. ............1930 ன் உலகப் பெருமந்தத்திற்கு காரணமாகவும் அமைந்தது. **(முதலீடு வீழ்ச்சி)**
35. ............... என்பது மக்களின் கையிருப்பு (ரொக்கம்) பணம் ஆகும். **(நீர்மை விருப்பம்)**
36. பண்டங்களைத் கொடுத்து பண்டங்களை வாங்குவது ............... என அழைக்கப்படுகிறது. **(பண்டம் மாற்று வாணிகம்)**
37. பணவாட்டம் என்பது விலைகள் ............... குறிக்கும். **(வீழ்ச்சியை)**
38. பரிமாற்றச் சமன்பாடு MV = PT என்பதை அளித்தவர். ............... **(இர்வின் ஃபிஷர்)**
39. பணக்கொள்கை .............. கட்டுப்படுத்த உதவுகிறது. **(பணவீக்கத்தை)**
40. ............... என்பது பல்வேறு வழிகளில் அரசுக்கு வரும் வருவாய் **(அரசின் நிதி)**
41. வரி விதிப்பின் அடிப்படை கோட்பாட்டை...............என்று அழைக்கிறோம் **(வரி விதிகள்)**
42. ............... வரி என்பது வளர்வித வரியையும், விகிதாச்சார வரியையும் உள்ளடக்கியது ஆகும். **(மித வளர்வீத)**

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR

www.Kanchikalvi.com



## III. பொருத்தம்

1. பொருளாதார கோட்பாடுகள் – மார்ஷல்
2. முதல் நோபல் பரிசு – டிம்பர்கன் மற்றும் ஃபிரிஷ்
3. செல்வம் – இருப்பு
4. இயங்கு நிலை அணுகுமுறை – காலகட்டம்
5. ஆட்சியாளரின் ஆதிக்கம் – சமதர்மம்
6. வருமானம் – ஓட்டம்
7. குறைந்த பட்ச உற்பத்திச் செலவு – அதிக பட்ச நன்மை
8. சந்தை சக்திகள் – அளிப்பு, தேவை மற்றும் விலை
9. பொருளாதாரக் கோட்பாடுகள் – மார்ஷல்
10. அதிகபட்ச சமூக நன்மைகள் – ஹிக்ஸ் மற்றும் டால்டன்
11. சமநோக்கு வளைக்கோடு – சாதாரண தரம்
12. ஆடம்பர பண்டங்கள் – வைர ஆபரணங்கள்
13. விலை, தேவை நேரடியான உறவு – வெப்ளன் விளைவு
14. தேனீர் மற்றும் காபி – பதிலீட்டுப் பண்டங்கள்
15. குறுக்குத்தேவை நெகிழ்ச்சி பூஜ்யம் – **X** மற்றும் **Y** தொடர்புடையன அல்ல
16. சமநிலை – விலை மற்றும் அளவின் இணை
17. மிகைத்தேவை – **D > S**
18. தள்ளுபடி விலை (அல்லது) கழிவு விலை – ஆண்டு இருப்பை விற்றுத் தீர்க்க
19. குறுகிய காலவிலை – தேவையும் அளிப்பும்
20. வேலைப் பகுப்புமுறை – ஆடம் சுமித்
21. உற்பத்தி சார்பு – காப்டக்லஸ்
22. இடர்பாடுகளின் தொகுப்பு – ஹாலே
23. நீண்டகால சராசரி செலவு வளைக்கோடு – திட்ட வளைக்கோடு
24. **MCn** – **TCn - TCn - $_1$**
25. இலாபம் – **TR - TC**
26. உலக அங்காடி – தங்கம் மற்றும் வெள்ளி
27. தொழில்நுட்ப முற்றுரிமை – கோகோ – கோலா
28. முற்றுரிமையாளர் போட்டி – **E.M.** சேம்பர்லின்
29. எச்ச உரிமை கூலிக்கோட்பாடு – வாக்கர்
30. கடன் நிதிக்கோட்பாடு – புதிய தொன்மைகால கோட்பாடு
31. இடர் தாங்கும் இலாப கோட்பாடு – ஹாலே
32. ஒட்டு மொத்த தேவை – **C + I + G + ( X - M )**
33. **K** – **1 / 1- MPC**
34. கீன்சு – நீர்மை விருப்பம்
35. கடன் தன்மைக் கோட்பாடு – அறிவுறுத்தல்
36. மலிவுப் பணக் கொள்கை – குறைந்த வட்டி வீதம்
37. பணத்தின் மதிப்பு – பணத்தின் வாங்கும் சக்தி
38. புனித வரிவிதிப்பு முறை – ஆதம் ஸ்மித்
39. வளர்வீத வரி – சிறந்த வரிமுறை
40. சமச்சீர் நிதிநிலை அறிக்கை – வருவாயும் செலவும் சமமாக இருக்கும்

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR



www.TnpscExamOnlineResult.blogspot.in

## IV. ஓரிரு வார்த்தைகளில் விடைகள்

1. பொருளாதாரத்தின் வேறு பெயர் என்ன? **(அரசியல் பொருளாதாரம்)**
2. இலவச பண்டங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக. **(காற்று, சூரிய ஒளி)**
3. பொருளாதார முறை என்றால் என்ன? **(பண்டங்கள், பணிகளின் உற்பத்தி மற்றும் பகிர்வு)**
4. அளவுக்கதிகமான உற்பத்தியின் விளைவு எது? **(வீழ்ச்சி)**
5. பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற இருநாடுகளைக் கூறுக.? **(சீனா, கியூபா)**
6. பண வருமானத்திற்கு வேறு பெயர் என்ன ? **( பெயரளவு வருமானம்)**
7. கலப்புப் பொருளாதாரத்தில் திட்டமிடுதல் உண்டா.? **(ஆம்)**
8. பயன்பாட்டை வரையறு? **(விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தி)**
9. சம இறுதிநிலைப் பயன்பாட்டிற்கு, வேறு பெயர் என்ன? **(காசனின் இரண்டாம் விதி)**
10. சமநோக்கு வளைகோடு என்றால் என்ன? **(இருபண்டங்களின் பல்வேறு இணைப்புகள் மூலம் கிடைக்கும்)**
11. சமநோக்கு தொகுதி என்றால் என்ன? **(இருபண்டங்களுக்கான வெவ்வேறு நிலையான பயன்பாட்டை விளக்கும்)**
12. நிதி நிலைக் கோட்டிற்கு மற்றொரு பெயர் என்ன? **(விலை விகித கோடு)**
13. பொருளாதார கோட்பாட்டின் அடிப்படை எடுக்கோள்கள் யாவை? **(மற்றவை மாறாதிருக்கும் போது)**
14. புள்ளி முறையின் வாய்பாடு என்ன? **தேவை வளைகோட்டின் கீழ்ப் பகுதி / தேவை வளைகோட்டின் மேல் பகுதி**
15. வருமான தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன? **(வருமானத்தில் ஏற்பட்ட மாற்றத்தால் தேவையில் ஏற்பட்ட மாற்ற அளவு)**
16. பொது சமநிலை என்றால் என்ன? **( மாற்றத்திற்கான சூழல் காணப்படாத நிலை)**
17. காலத்தின் பங்கினை அறிமுகப்படுத்தியவர் யார்? **(ஆல்பிரட் மார்ஷல்)**
18. நிலையான முதலீட்டிற்கு ஒரு எதாரணம் கொடு. **(கனரக இயந்திரங்கள்)**
19. அங்காடிக் காலத்தில் அளிப்பு நிலையானதா? **(ஆம்)**
20. சமுதாய மாற்றம் காணும் முகவர் யார்? **(தொழில் முனைவேர்)**
21. சமஅளவு உற்பத்திக் கோட்டிற்கு வேறு பெயர் யாது? **(சம உற்பத்தி கோடுகள்)**
22. காப்-டக்லஸ் உற்பத்தி சார்பினைக் கூறு. **($Q = bL^{a}\ C^{1-a}$)**
23. இறுதிநிலை வருவாய் என்பது என்ன? **(மொத்த வருவாயுடன் சேர்ந்த கூடுதல்)**
24. சமமுறிவுப் புள்ளி என்றால் என்ன? **(இலாபமும் நட்டமும் இல்லா நிலைப்புள்ளி)**
25. உறை வடிவ வளைக்கோடு என்பது என்ன? **(திட்ட வளைக்கோடு)**
26. சராசரி செலவை எவ்வாறு கணக்கிடுவாய்? **(TC / Q)**
27. தொழிற்சாலை என்றால் என்ன? **(பல நிறுவனங்களை கொண்டது)**
28. பொது பயன்பாடுகளை மேற்கொள்பவர் யார்? **(அரசு)**
29. அரசாங்கம் முற்றுரிமையை எவ்வாறு கட்டுப்படுத்தும்? **(வரி விதிப்பு, சட்ட முறை)**
30. **MRTP** சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது **(1969)**
31. ரிக்கார்டோவின் கூற்றுப்படி எல்லா நலங்களும் வளம் பெறுகின்றன? **(இல்லை)**
32. ஏஜியோ வட்டி கோட்பாட்டின் ஆசிரியர் யார்? **(போம் – போகுவர்க்)**
33. இலாப – வார கோட்பாட்டின் ஆசிரியர் யார் ? **(வாக்கர்)**
34. சும்பிட்டரின் இலாப கோட்பாட்டின் பெயர் என்ன? **(புத்தாக்க கோட்பாடு)**
35. **J.B.** சேயின் சந்தை விதியைக் கூறுக? **(அளிப்பு அதன் தேவையை உண்டாக்கும்)**
36. பெருக்கியின் வாய்ப்பாட்டை எழுதுக? **(K = 1/1-MPC )**

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR

www.Kanchikalvi.com



37. நாட்டின் பண அளிப்பைக் கட்டுப்படுத்தும் வங்கி எது? **(மைய வங்கி)**
38. விலையில் மாற்றமில்லாத போது ஏற்படும் பணவீக்கம் எது? **(கட்டுப்படுத்தப்பட்ட பண வீக்கம்)**
39. மிகை வேக பணவீக்கத்தினை சந்தித்த ஒரு நாடு எது? **(ஜெர்மனி)**
40. வரி என்பது என்ன? **(ஒவ்வொரு குடிமகனும் கட்டாயம் செலுத்த வேண்டியது)**
41. VAT என்பதின் விரிவாக்கம் யாது? **(மதிப்புக் கூட்டு வரி(அ) Value Added Tax)**
42. நிதிநிலை அறிக்கையின் வகைகள் யாவை ? **(சமநிலை,சமநிலையற்ற நிதி நிலை அறிக்கை)**
43. பொதுக் கடன் என்பது என்ன? **(பொது மக்கள் இருந்து கடன் பெறுவது)**

## V. மூன்று மதிப்பெண் வினா விடைகள்

**1. சமுதாயத்தில் காணப்படும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் :-**

1. என்ன உற்பத்தி செய்வது?
2. எவ்வளவு உற்பத்தி செய்வது?
3. எவ்வாறு உற்பத்தி செய்வது?
4. யாருக்காக உற்பத்தி செய்வது?

**2. பொருளாதார முறைகள் :-**

1. பழமைப் பொருளாதாரம்
2. முதலாளித்துவ பொருளாதாரம்
3. பொதுவுடைமை பொருளாதாராம்
4. கலப்பு பொருளாதாராம்

**3. பொது உடமையின் அடிப்படை சிறப்புகள் :-**

1. சமூக நலன்
2. தனியார் சொத்துரிமையின்மை
3. மையத்திட்டம்
4. அங்காடிச் சக்திகள் இல்லை

**4. வாய்ப்புச் செலவு :-**

1. சில வாய்ப்புகளை இழப்பதால் ஏற்படும் செலவாகும். (எ.கா.) டிவி பார்த்தல்
(அல்லது)
2. அடுத்த, தகுந்த மாற்றுப்பண்டங்களின் மதிப்பை குறிக்கும்.

**5. இந்திய கலப்பு பொருளாதாரமா. விவரி :-**

1. ஆம், அரசு துறையும், தனியார் துறையும் சேர்ந்து இயங்குவது
2. அரசு துறை :- என்ன உற்பத்தி செய்வது? எப்படி? யாருக்காக உற்பத்தி செய்வது என முடிவு செய்கிறது
3. தனியார் துறை :- பண்டங்கள், பணிகள் என உற்பத்தி செய்து விநியோகம் செய்கிறது.

**6. சமநிலை விலை :-**

எந்த விலையில் தேவையும், அளிப்பும் சமமாக உள்ளதோ அதுவே சம நிலை விலை ஆகும்.

(அல்லது)

குறிப்பிட்ட விலையில் வாங்குபவர்கள் விருப்பமும், அளவும் விற்பவர்கள் விருப்பமும், அளவும் சமமாகும் இதுவே சமநிலை விலையாகும்.

(அல்லது)

தேவைகோடும், அளிப்புக்கோடும் வெட்டும் புள்ளி சமநிலை விலை எனப்படும்.

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR



www.TnpscExamOnlineResult.blogspot.in

**7. தேவையில் மாற்றம், தேவை கோடு இடம் பெயர்தல் வேறுபாடு :-**

தேவை மாற்றம் ----- விலை மாறும், மற்ற காரணிகள் மாறாது.

தேவை கோடு இடம் பெயர்தல் --- விலை மாறாது, மற்ற காரணிகள் மாறும்.

**8. அளிப்பு கோடு இடம் பொருவதற்கான காரணங்கள் :-**

1. நிறுவனங்களின் எண்ணிக்கை 2. தொழில் நுட்பம்
3. வரிகள் மற்றும் சலுகைகள் 4.பிற பண்டங்களின் விலை.

**9. நீண்ட காலம், குறுகிய காலம் வேறுபாடு :-**

குறுகிய காலம் :- சில உற்பத்திக் காரணிகளை மாற்ற இயலாது.

நீண்ட காலம் :- எல்லாக் காரணிகளையும் மாற்ற முடியும்.

**10. அங்காடி காலம் :-**

1. அங்காடி காலம் மிகக் குறுகிய காலம். இக்காலத்தில் தேவையில் மாற்றத்திற்கேற்ப அளிப்பில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாத காலம்.
2. அளிப்பு நிலையானது
3. விலையானது தேவையால் தீர்மானிக்கப்படுகிறது
4. (எ.கா) பூ, பழம், கனிகள்.

**11. பயன்பாட்டின் வகைகள் :-**

1. வடிவப் பயன்பாடு 2. இடப் பயன்பாடு 3. காலப் பயன்பாடு

**12. உழைப்பு :-**

உழைப்பு என்பது மனித இடுபொருள் ஆகும். ஒரு பணியை செய்வதற்காக கைமாறு எதிர்பார்த்து மனிதன் தன் உடல் அல்லது அறிவை முழுமையாகவோ, பகுதியாகவோ பயன்படுத்தி மேற்கொள்ளும் கடும் முயற்சியே உழைப்பாகும்.

**13. வேலைப்பகுப்பு முறைகள் :-**

ஒரு உற்பத்தி முறையை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாய் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவிடம் ஒப்படைத்தல் வேலை பகுப்பு முறை ஆகும்.
(எ.கா) ஆடைகள் தயாரித்தல்.

**14. மூலதனத்தின் வடிவங்கள் :-**

1. பொருள் மூலதனம் (இயந்திரம், கட்டிடம்) 2. பண மூலதனம் (வங்கி இருப்பு)
3. மனித மூலதனம். (கல்வி, உடல்நலம்)

**15. உற்பத்தி சார்பு வகைகள் :-**

ஒரு நிறுவனத்தின் உள்ளீடு, வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பாகும்.

உள்ளீடு :- நிலம், உழைப்பு, மூலதனம்

வெளியீடு :- உற்பத்தியின் மொத்த அளவைக் குறிக்கும்.

வகைகள்:-

1. குறுகிய கால உற்பத்தி 2. நீண்ட கால உற்பத்தி

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR

www.Kanchikalvi.com



**16. பொருளாதார செலவுகள் :-**

வெளியேறு செலவுகள், மட்டுமின்றி உள்ளார்ந்த செலவுகளையும் சேர்ந்த மொத்தத் தொகையே பொருளாதாரச் செலவாகும்.

(அல்லது)

பொருளாதாரச் செலவு = வெளியுறு செலவு + உள்ளார்ந்த செலவுகள்

**17. இறுதி நிலைச் செலவு :-**

ஏற்கனவே உள்ள உற்பத்தி அளவில் ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும் மாற்றமே (அல்லது) கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதி நிலை செலவு ஆகும்.

**18. MC மற்றும் AC க்கும் இடையேயான உறவுகள் :-**

1. MC < AC எனில் AC குறையும்.
2. MC > AC எனில் AC அதிகரிக்கும்.
3. MC , AC ஐ தாழ்ந்த புள்ளியில் வெட்ட வேண்டும், அப்பொழுது MC = AC அதிகரிக்கும்.

**19. நீர்மை விருப்பக்கோட்பாடு :-**

1. பரிமாற்ற நோக்கம், 2. முன்னெச்சரிக்கை நோக்கம், 3. ஊக வாணிப நோக்கம்

**20. ஒட்டு மொத்தத் தேவை எந்த இரு காரணிகளைச் சார்ந்தது:-**

1. நுகர்ச்சி நாட்டம் 2. முதலீட்டு தூண்டலைச் சார்ந்தது.

**21. பெருக்கி :-**

ஆரம்ப முதலீட்டால் வருமானத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்தில் ஏற்படும் விளைவே பெருக்கி ஆகும்.

(அல்லது)

**K = 1/1-M .Pc (அல்லது) K = 1/ MPc (அல்லது) K = $\triangle$Y / $\triangle$ I**

**22. பணத்தின் இலக்கணம் :-**

" பணம் எதை எல்லாம் செய்ய வல்லதோ அதுவே பணம் " – வாக்கர்

**23. பண அளிப்பின் நான்கு கூறுகள் :-**

1. M1 2. M2 3. M3 4. M4

**24. பணக்கொள்கையின் இலக்கணம் :-**

பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்களை அடைய பண அளிப்பு மற்றும் பணத்தை உற்பத்தி செய்ய ஆகும் செலவுகளை கட்டுப்படுத்த மையவங்கி மேற்கொள்ளும் நடவடிக்கை ஆகும்.

**25. கடன் அளவு கட்டுப்பாட்டு கருவிகள் :-**

1. வங்கி வீதம் 2. ரொக்க இருப்பு வீதத்தில் மாற்றம் 3. வெளிச்சந்தை நடவடிக்கைகள்

**26.** பொருளாதாரத்தின் முக்கிய பிரிவுகள்:-

1. நுகர்வு 2. உற்பத்தி 3. பகிர்வு 4. பரிமாற்றம் 5. பொதுநிதி

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR



www.TnpscExamOnlineResult.blogspot.in

27. பொருளாதாரம் பற்றி ஆல்பிரட் மார்ஷலின் இலக்கணம்:-

1. 1890 ஆம் ஆண்டு பொருளாதாரக் கோட்பாடு என்ற நூலை வெளியிட்டார்.

2. "சாதாரண மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது".

**28. இலவச பண்டங்கள் மற்றும் பொருளாதார பண்டங்கள் வேறுபாடுகள் :**

| இலவச பண்டங்கள் | பொருளாதார பண்டங்கள் |
|---|---|
| 1.இயற்கையின் கொடை<br>(எ.கா) காற்று சூரிய ஒளி | 1.சந்தையில் விலை கொடுக்க வேண்டும்.<br>(எ.கா) பஸ், கார், லாரி |
| 2. மாற்றுமதிப்பு இல்லை | 2. மாற்று மதிப்பு உண்டு. |

## VI. பத்து மதிப்பெண் வினா விடைகள்

**1. சேயின் அங்காடி விதியின் குறைபாடுகள் :-**

1. உலக பெருமந்தத்தால் சே விதியின் புகழ் மங்கிப்போனது.
2. வருமானம் அனைத்தும் நுகர்விற்காக அல்ல.
3. சேமிப்பு அனைத்தும் முதலீடு ஆகாது
4. அங்காடி பற்றிய தவறான ஆய்வு.
5. ஒட்டு மொத்தம் என்ற தவறான கருத்தால் பாதிப்பு.
6. ஒட்டு மொத்ததேவையும் ஒட்டு மொத்த அளிப்பும் சமம் இல்லை.
7. வட்டி வீதம் சமப்படுத்தும் காரணி இல்லை
8. முதலாளித்துவம் தன்னைத் தானே சரி செய்து கொள்ளாது.
9. நிறைவுப் போட்டி உண்மையற்ற எடுகோள்
10. பணம் ஒரு முக்கிய சக்தி,
11. நீண்டகாலத்திற்கு மட்டுமே பொருந்தும்.
12. பண்ட மாற்று பொருளாதாரத்திற்கு மட்டுமே பொருந்தும்.

**2. நுகர்வை தீர்மானிக்கும் வருமானம் தவிர்த்த பிற காரணிகள் :-**

1.வருமானப் பகிர்வு
2.செல்வ பகிர்வின் அளவு மற்றும் இயல்பு
3.மக்கள் தொகையின் வயதுப் பாகுபாடு
4.பணவீக்கம் அல்லது விலை அளவு
5.அரசின் கொள்கைகள்
6.வட்டி வீதம்
7.எதிர்பார்ப்புகள்
8.விளம்பரங்கள்
9.வாழ்க்கை தரவளர்ச்சி
10.கலாச்சாரம் மாற்றம்

**3. கீன்சின் வருமான நிர்ணயம் :-**

1. சமுதாயத்தில் நுகர்வு **(C)** மற்றும் நிறுவனங்கள் **(I)** இருபிரிவு
2. அரசின் தூண்டுதல் இல்லை **(G = 0)**
3. மூடப்பட்ட பொருளாதாரம் **(X - M = 0)**
4. கூலி, விலையில் மாற்றம் இல்லை
5. முழு வேலை வாய்ப்பை விட குறைவான நிலை
6. வட்டி விதத்தில் மாற்றம் இல்லை
7. மூதலீடு தன்னிச்சை ஆனது.
8. நுகர்வு செலவு நிலையானது.
9. **Y =C + I+G+(X-M)** **Y = C+I**



MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR

**4. கீன்ஸ் கோட்பாட்டின் சாராம்ச – வரைபடம்**

வருமானம் மற்றும் வேலைவாய்ப்பை பற்றிய கீன்ஸ் தகவல் படம்

உறுதித் தேவை = வெளியீடு = வருமானம் = வேலை வாய்ப்பு

ஒட்டு மொத்த அளிப்பு சார்புப் பணி

ஒட்டு மொத்த தேவை சார்புப் பணி

நுகர்வு சார்புப் பணி

முதலீடு சார்புப் பணி

வருமான அளவு

இறுதிநிலை நாட்டம்(MPC)

மூலதனத்தின் இறுதி நிலைத்திறன் (MEC)

வட்டி வீதம்

மூலதனத்தின் அளிப்பு விலை

மூலதனத்தின் வாயிலாக பெறும் விளைச்சல்

பொதுமக்களின் நீர்மை விருப்பம்

பொருளாதாரத்தில் பணத்தின் அளிப்பு

பேர நோக்கம்

முன்னெச்சரிக்கை நோக்கம்


ஊக வாணிக நோக்கம்

**5. நுகர்வு சார்பு – வரைபடம்**

**நுகர்வு சார்பு :-**

1. வருமானத்திற்கும், நுகர்விற்கும் இடையே உள்ள தொடர்பு ஆகும்.
2. வருமானத்தை சிலர் முழுவதும், வேறு சிலர் ஒரு பகுதியைச் செலவு செய்கிறார்,

**1. வரைப்படம்.**




MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR

**வரைபடவிளக்கம் :-**

1. **OY** அச்சில் வருமானம் **OC** அச்சில் செலவு குறிக்கும்
2. பல்வேறு வருமான நிலைகளில் நுகர்விற்காக செலவிடப்பட்ட வருமானம் நுகர்ச்சி நாட்டம்.
3. $C = a + by$ $C = 4+0.8y$
4. நுகர்வு வளைகோடு **"CC"** குறுகிய கால வளைகோடாகும்
5. வருமானம் **C** பூஜ்யமாக இருந்தாலும் நுகர்வு நடைபெறும்
6. முதல் கட்ட நுகர்வு 4 ஆகும்
7. இறுதி நிலை நுகர்வு நாட்டம் = $\triangle C / \triangle Y$
8. சரிவுக் கோடு **b** - யஇறுதி நிலை நுகர்வு நாட்டம்
9. வருமானத்தோடு தொடர்பு இல்லாத நுகர்வு தன்னிச்சை நுகர்வு.

**6. ஆடம் ஸ்மித்தின் புனித வரி விதிப்பக் கொள்கை :-**

**வரி விதிப்பின் கொள்கை :-**

1.சமத்துவ விதி 2.தெளிவு விதி 3.வசதி விதி 4. சிக்கன விதி.

**1.சமத்துவ விதி :-**

1. ஒருவன் தன் சக்திக்கேற்ப வரி செலுத்த வேண்டும்.
2. வரி விதிப்பானது நீதியின் அடிப்படையில் அமைய வேண்டும்.
3. ஏழையின் மீது குறைவாகவும் பணக்காரரின் மீது அதிகமாகவும் வரி விதித்தல்

**2.தெளிவு விதி :-**

ஒவ்வொரு குடிமகனும் தான் செலுத்த வேண்டிய வரியின் அளவு, எப்போது, யாரிடம் வரி செலுத்த வேண்டும் என்பதை அறிய வேண்டும்.

**3. வசதி விதி :-**

1. வரி செலுத்துதல், வரி செலுத்துவோருக்கு வசதியாகவும், பாரம் குறைந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

2. சம்பளத்தில் பிடித்தல் (எ.கா) வருமான வரி, நில வரி

**4. சிக்கன விதி :-**

1. இவ்விதி வரிவிதிப்பிலும், வரி வசூலிப்பிலும் அதிக பணம் விரையம் ஆகாமல் இருக்க வேண்டும்.

2. இதன்படி வரி வசூல் முறைகள் எளிமையாகவும், வரி வசூலிக்க குறைந்த அளவு செலவை மேற்கொள்ள வேண்டும்.

**7. மாநில அரசின் முக்கிய வரிவருவாய் மற்றும் வரியற்ற வருவாய் :-**

1. நில வருவாய்
2. வேளாண் வருவாய் மற்றும் வேளாண் பண்ணைகள் மீது வரி
3. நிலம்,மனைகள் கட்டிடங்கள் மீதான வரிகள்
4. மதுவகைகள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வைகள்
5. கனிம பொருட்களின் உரிமைகள் மீது வரிகள்
6. மின்சார நுகர்வு, விற்பனை மீதான வரிகள்.
7. இருப்புபாதை உள்நாட்டு நீர்வசதி – சரக்கு மீதான வரிகள்.
8. விலங்குகள், படகுகள், வாகனங்கள் மீதான வரிகள்.
9. முத்திரை தாள் வரிகள், நீதிமன்றகட்டணம், பதிவு கட்டணம்.
10. பொழுதுபோக்கின் மீது விதிக்கப்படும் வரிகள்
11. விளம்பரங்கள் மீதான வரிகள்

MUNIAPPAN GHSS, PALAYAMPUDUR

www.Kanchikalvi.com


12.தொழில்கள், வார்த்தகம், வேலைகள் மீதான வரிகள்
13.நீர்பாசனம், காடுகள் மூலம் கிடைக்கும் வரிகள்
14.மத்திய அரசின் மானியங்கள் மீதான வரிகள்.
15.சுங்கவரிகள் மற்றும் கடன்கள் மீதான வரிகள்

**8. ஆண்டு நிதி நிலை அறிக்கை :-**

ஆண்டு நிதிநிலை அறிக்கை – வரவு செலவுத் திட்டம்
டிமாக் – ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சமமாக கணக்கிட வரவு, செலவு என்கின்றார்

சமநிலை வரவு செலவு திட்டம் :-
அரசின் செலவுகளும், வருவாயும் சமமாக இருக்கும்.
சமனற்ற வரவு செலவுத் திட்டம் :-
அரசின் வருவாய், செலவை விட சமமில்லாத நிலையை சமனற்ற வரவு செலவு திட்டம்.
(I). உபரி வரவு செலவு திட்டம் :-
அரசின் வருவாய், செலவை விட அதிகமாக இருப்பது.
(II). பற்றாக்குறை வரவு செலவு திட்டம் :-
செலவை காட்டிலும், அரசு வருவாய் குறைவாக இருப்பது.

அறிஞர்களின் கருத்து :-
சமநிலை வரவு செலவுத் திட்டமே சிறந்தது – தொன்மை பொருளியில்.
சமனற்ற வரவு செலவுத் திட்டமே நாட்டிற்கு பயனுள்ளது – நவீன பொருளியில்.

**8. நேர்முக வரி, மறைமுக வரி வேறுபாடுகள் :-**

| வ.எண் | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1 | டால்டன் – யார்மீது வரி விதிக்கப்படுகிறதோ அவரே வரியை செலுத்த வேண்டும். | ஒருவர் மீது விதிக்கப்பட்டு மற்றொருவர் வரியை செலுத்துவது. |
| 2 | வரி செலுத்துபவரே வரி சுமையைச் சுமக்க வேண்டும். | வரி விதிக்கப்பட்டவர் வேறு, வரி சுமையை சுமப்பவர் வேறு. |
| 3 | (எ.கா) வருமான வரி, சொத்து வரி | (எ.கா) சுங்கவரி, விற்பனை வரி |
| 4 | மக்களிடம் இருந்து நேரடியான வரிவசூல் | பண்டங்கள் மீது விதிக்கப்படுவது. |
| 5 | பணச் சுமையும், உண்மை சுமையும் ஒருவர் மீதே விழுகிறது. | பணச்சுமை ஒருவர் மீதும் உண்மை சுமை மற்றொருவர் மீது விழும். |
| 6 | வரி ஏய்ப்பு கடினம். | வரி ஏய்ப்பு உண்டு. |

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR


www.TnpscExamOnlineResult.blogspot.in

| | | |
|---|---|---|
| 7 | வரி புரட்டுகை இல்லை. | வரி புரட்டுகை உண்டு. |
| 8 | நிகழ்வு மாற்றம் இல்லை. | நிகழ்வு மாற்றம் உண்டு. |
| 9 | பணக்காரர்கள் மீது விதிக்கப்படும் | ஏழைகள் மீது விதிக்கப்படும். |

MUNIAPPAN,GHSS, PALAYAMPUDUR

**9. AR மற்றும் MR கோடுகளின் இடையேயான உறவுகள் :-**


அ. நிறைவுப் போட்டியில் :-

1. **AR** நிலையாக இருக்கும் போது **MR** நிலையாக இருந்து இரண்டும் ஒரே வளைக்கோட்டில் சேர்ந்து விடும்.

ஆ. அட்டவணை :-

| விற்பனை (அலகுகள்) | AR விலை சராசரி வருவாய் | TR மொ.வ | MR இ.நி.வ |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 |
| 2 | 10 | 20 | 10 |
| 3 | 10 | 30 | 10 |
| 4 | 10 | 40 | 10 |
| 5 | 10 | 50 | 10 |
| 6 | 10 | 60 | 10 |

இ. வரைப்படம் :-





**ஈ. நிறை குறை போட்டி :-**

1. **AR , MR** இன் மதிப்பு ஒன்றாக இருப்பது இல்லை.
2. **MR** ஆனது **AR** ஐ விட அதிகமாக குறையும்
3. **MR, AR** கோடுகள் கீழ் நோக்கி சரியியும்.

**உ. அட்டவணை,**

| அலகுகள் | AR(ச.வ) | TR(மொ.வ) | MR(இ.நி.வ) |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 |
| 2 | 9 | 18 | 8 |
| 3 | 8 | 24 | 6 |
| 4 | 7 | 28 | 4 |
| 5 | 6 | 30 | 2 |
| 6 | 5 | 30 | 0 |

**ஊ. வரைப்படம் :-**




**10. இறுதி நிலைச் செலவுகள் :-**

1. ஏற்கனவே உள்ள உற்பத்தி அளவில் ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும் மாற்றமே (அல்லது) கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதி நிலை செலவு ஆகும்.
2. **MCn = TCn - TCn - I**

அட்டவணை :-


| அலகுகள் | மொத்த செலவு (TC) | இறுதிநிலை செலவு (MC) |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 35 | 15 |
| 3 | 45 | 10 |
| 4 | 50 | 5 |
| 5 | 60 | 10 |
| 6 | 75 | 15 |
| 7 | 95 | 20 |

**வரைப்படம் :-**




1. இறுதி நிலை செலவு வளைகோடு"U" வடிவம்.
2. "U" வடிவத்தை மாறும் விகித விளைவு விதி தீர்மானிக்கிறது.
3. ஏனெனில் உற்பத்தி அலகுகள் கூடும் பொழுது செலவு குறைந்து வரும்.

**11. SAC மற்றும் SMC க்கும் உள்ள உறவுகள் :-** **வரைப்படம் :-**




1. MC < AC எனில் AC குறையும்.
2. MC > AC எனில் AC அதிகரிக்கும்.
3. MC , AC ஐ தாழ்ந்த புள்ளியில் வெட்ட வேண்டும்,
4. அப்பொழுது MC = AC அதிகரிக்கும்.


www.TnpscExamOnlineResult.blogspot.in

www.Kanchikalvi.com


## VI. இருபது மதிப்பெண் வினா விடைகள் :-

### 1. தேவை விதி :-

குறிப்புச் சட்டம் :-

1. தேவை – இலக்கணம்
2. எடுகோள்கள்
3. தேவைப்பட்டியல் – விளக்கம்
4. வரைப்படம் – விளக்கம்
5. அங்காடி தேவை பட்டியல்
6. அங்காடி தேவை வளைக்கோடு – விளக்கம்.

**இலக்கணம் :-**

:.பெர்கூசன் என்பவரின் கூற்றுப்படி " விலையும் தேவையின் அளவும் எதிர்கணியத் தொடர்புடையது." "விலை குறையும் போது தேவை அதிகரிக்கும், விலை உயரும் போது தேவை குறையும்".

**2.எடுக்கோள்கள் :-**

அ. நுகர்வோர் வருமானத்தில் மாற்றமில்லை.
ஆ. நுகர்வோர் சுவையிலும்,விருப்பத்திலும் மாற்றமில்லை.
இ. பிறபொருட்களின் விலையில் மாற்றமில்லை.
ஈ. பிறபதிலிகளை கண்டுபிடிக்க வில்லை.


**3.தேவைப்பட்டியல்**

| விலை ரூ | தேவை (கிலோ) |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |

**விளக்கம்.**

விலை 5 ரூபாய் இருக்கும்போது தேவை அளவு 1 கிலோ ஆகும். விலை 4, 3, 2, 1 ரூபாய் இருக்கும் போது தேவை அளவு 2, 3, 4, 5 கிலோ ஆகும். விலை அதிகரிக்கும் போது தேவை குறையும், விலை குறையும் போது தேவை அதிகரிக்கும் – தேவை விதி.

**வரைப்படம் :-**




A.MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR


www.TnpscExamOnlineResult.blogspot.in

www.Kanchikalvi.com




**விளக்கம்.**

1. **DD** – தேவைக் கோடு ஆகும்.
2. தேவைக் கோட்டு இடமிருந்து வலமாக கீழ் நோக்கி சரிந்து செல்கிறது
3. விலை குறையும் போது தேவை கூடுகிறது.

**அங்காடித் தேவைப் பட்டியல் :-**

| விலை(ஆரஞ்சு) | தேவை அளவு | | அலகுகள் அங்காடித்தேவை |
|---|---|---|---|
| | நுகர்வோர்–1 | நுகர்வோர்–2 | |
| 5 | 1 | – | 1 |
| 4 | 2 | 1 | 3 |
| 3 | 3 | 2 | 5 |
| 2 | 4 | 3 | 7 |
| 1 | 5 | 4 | 9 |

**அங்காடித் தேவை வளைகோடு :-**




**விளக்கம்.**

வரைபடத்தின் நுகர்வோர் **1**, நுகர்வேர் 2 ஆகிய இரு நுகர்வோரின் தேவை அளவு **X** அச்சிலும், விலை **Y** அச்சிலும் குறிக்கப்பட்டு உள்ளது, அதாவது **D1 + D2 = DD** என்ற அங்காடி தேவைக்கோடு ஆகும்.

**2. விலை தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் :-**

குறிப்புச் சட்டம் :-

1. விழுக்காடு முறை
2. புள்ளி முறை
3. மொத்தச் செலவு முறை
4. வில் முறை



www.TnpscExamOnlineResult.blogspot.in

**1.விழுக்காட்டு முறை :-**


விழுக்காட்டு அளவில் தேவை மாற்றத்தை விழுக்காட்டு அளவில் விலை மாற்றத்தால் வகுப்பதன் மூலம் தேவை நெகிழ்ச்சி அளவிடலாம்

| | | | |
|---|---|---|---|
| $e_p$ = | %Δ Q | = | விழுக்காடு தேவை மாற்றம் |
| | %Δ P | | விழுக்காடு விலை மாற்றம் |

**(எ.கா)** அரிசியின் விலை 10 % உயரும் போது அரிசியின் தேவை 15 % குறைந்தால் விலை தேவை நிகழ்ச்சி ($e_p$) என்பது $e_p = \frac{15}{10} = 1.5$

**2.புள்ளி முறை :.**

நேராக அமைந்துள்ள தேவை கோட்டின் மீது உள்ள ஒரு குறிப்பிட்ட புள்ளியில், விலைத் தேவை நெகிழ்ச்சியைக் கணக்கிடலாம்.





1. **E** என்ற புள்ளியில் **EB / EA=2/2 = 1** **ep=1**
2. **D** என்ற புள்ளியில் **DB / DA=1/3=0.3** **ep<1**
3. **C** என்ற புள்ளியில் **CB / CA=3/1=3** **ep>1**
4. **B** என்ற புள்ளியில் **O / AB=0/4=0** **ep=0**
5. **A** என்ற புள்ளியில் **AB /0=4/0= ∞**

**3.மொத்த செலவு முறை :-**

1. ஒரு பண்டத்தின் விலை குறையும் போது மொத்த செலவை அதிகரித்தால் அது மிகை நெகிழ்சியுள்ள தேவையாகும் $e_p > I$
2. ஒரு பண்டத்தின் விலை குறையும் போது மொத்த செலவை குறைத்தால் நெகிழ்ச்சியுள்ள தேவையாகும் $e_p < I$
3. ஒரு பண்டத்தின் விலை குறையும் போது மொத்த செலவில் எந்த மாற்றமும் இல்லை அது ஒருமைத் தேவை நெகிழ்ச்சி. $e_p = I$

**4.வில் முறை :-**

ஒருதேவை வளைகோட்டின் இரண்டு புள்ளிகளுக்கு இடையே உள்ள பகுதியை வில் எனப்படும்.




Δ **Q** = தேவை அளவில் மாற்றம்
Δ **P** = விலையில் மாற்றம்
**P1** = முந்தைய விலை
**P2** = புதிய விலை
**Q1** = முந்திய தேவை
**Q2** = புதிய தேவை

$$\frac{\Delta Q}{\Delta P} \times \frac{P1 + P2}{Q1 + Q2}$$

3. **குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி :-**

குறிப்புச் சட்டம் :-

1. இலக்கணம் 2. எடுகோள்கள் 3. எடுத்துக்காட்டு 4. அட்டவணை – விளக்கம்
5. வரைப்படம் – விளக்கம் 6. விதியின் முக்கியத்துவம்

**1.இலக்கணம் :-**

“ ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது” – மார்ஷல்.

**2.எடுகோள்கள் :-**

1. நுகரப்படும் பண்ட அளவு ஏற்றுக் கொள்ளுதல்
2.நுகரப்படும் பண்டங்கள் ஒரே தன்மை, ஒரே அளவு
3.நுகர்வோரின் சுவை, விருப்பம், வருமானம் மாற்றமில்லை
4.நுகரும் பண்டம், பதிலீட்டுப் பண்டகளின் விலையில் மாற்றம் இல்லை
5.பயன் பாட்டை அளவிடமுடியும்.


3.**எடுத்துக்காட்டு :-**

அதிக அளவு தோசைகள் நுகர்வுகளிலிருந்து கிடைக்கும் இறுதி நிலைப் பயன்பாடு தொடர்ந்து குறைந்து கொண்டே செல்லும்.

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR

**4.அட்டவணை – விளக்கம் :-**

| தோசை அலகு | மொத்த பயன்பாடு | இறுதிநிலை பயன்பாடு |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 35 | 15 |
| 3 | 45 | 10 |
| 4 | 50 | 5 |
| 5 | 50 | 0 |
| 6 | 45 | -5 |
| 7 | 35 | -10 |




**5. வரைப்படம் – விளக்கம்**

மொத்த பயன்பாட்டு வளைகோடு மேல்நோக்கி உயர்ந்து, உச்ச நிலையை அடைந்து கீழ் நோக்கி சரியும்,

இறுதி நிலை பயன்பாட்டு வளைகோடு கீழ்நோக்கிச் சரிந்து, எதிர் மறையாகிவிடும்.

**விதியின் முக்கியத்துவம் :-**

1. தேவை விதி இவ்விதியின் அடிப்படையில் தோன்றியது.
2. இவ்விதி பணத்திற்கும் பொருந்தும்
3. நிதி அமைச்சருக்கு வரிவிதிக்க உதவுகிறது.
4. உற்பத்தியாளர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

**4. நுகர்வோர் உபரியின், முக்கியத்துவம், திறனாய்வும் :-**

**குறிப்புச் சட்டம் :-**

1. நுகர்வோர் உபரி – இலக்கணம் 2. அளவிடுதல் 3. அட்டவணை – விளக்கம்
4. வரைப்படம் – விளக்கம் 5. முக்கியத்துவம் 6. திறனாய்வு

**1.நுகர்வோர் உபரி – இலக்கணம் :-**

“ஒரு பொருளை வாங்காமல் இருப்பதை விட வாங்குவதே நல்லது என்று முடிவு செய்து நுகர்வோர் கொடுக்க நினைக்கும் விலைக்கும், உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் எச்சம் எனப்படும்”. – மார்ஷல்

**2.அளவிடுதல் :-**

நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மைவிலை

MUNIAPPAN,GHSS,PALAYAM


www.Kanchikalvi.com



**3.அட்டவணை :-**

| பண்டம் (அலகு) | இறுதிநிலை பயன்பாடு (தகுவிலை) | பண்டவிலை (உண்மைவிலை) | நுகர்வோர் எச்சம் |
|---|---|---|---|
| 1 | 50 | 10 | 40 |
| 2 | 40 | 10 | 30 |
| 3 | 30 | 10 | 20 |
| 4 | 20 | 10 | 10 |
| 5 | 10 | 10 | 0 |
| TOTAL | 150 | 50 | 100 |

**4. வரைப்படம் – விளக்கம்**




நுகர்வோர் எச்சம்

**விளக்கம்.**

1. MU இறுதிநிலைப் பயன்பாட்டு வளைக்கோடு
2. OP என்பது விலை OM என்பது பண்டத்தின் அளவு
3. தகுவிலை OAEM உண்மை விலை OPEM
4. நுகர்வோர் எச்சம் = OAEM - OPEM = PAE

**5.முக்கியத்துவம் :-**

1.நிதி அமைச்சருக்கு வரிவிதிப்பிற்கு பயன்படுகிறது.

2.பல்வேறு நாடு, பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தை அளவிட உதவும்.

3.ஏழை, பணக்கார நாடு – நுகர்ச்சி நிலையில் உள்ள வேறுபாடு அறியன்படுகிறது.

**6.திறனாய்வு :-**

1.பயன்பாடு அளவிடக் கூடியது.

2.பணத்தின் இறுதி நிலைப் பயன்பாடு நிலையானது.

MUNIAPPAN,GHSS,PALAYAMPUDUR



www.TnpscExamOnlineResult.blogspot.in

www.Kanchikalvi.com



**5. மனித விருப்பங்களின் இயல்புகள்:**

1. விருப்பங்கள் எண்ணற்றவை.
2. விருப்பங்கள் நிறைவேறக் கூடியவை.
3. விருப்பங்கள் போட்டியிடுபவை.
4. விருப்பங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.
5. விருப்பங்கள் மாற்றுப் பொருளால் நிறைவு பெறுபவை.
6. விருப்பங்கள் மீளத் தோன்றும் இயல்பு உடையவை.
7. விருப்பங்கள் விளம்பரங்களின் மூலம் தோன்றக் கூடியவை.
8. விருப்பங்கள் நேரத்தால், இடத்தால், மனிதனுக்கு தகுந்தாற்போல் மாறக் கூடியவை.
9. விருப்பங்கள் பழக்கங்களாவும், வழக்கங்களாகவும் மாறக் கூடியவை.
10. விருப்பங்கள் நண்பர்கள் மூலமாக மாறக் கூடியவை.

MUNIAPPAN GHSS,PALAYAMPUDUR





www.TnpscExamOnlineResult.blogspot.in